**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.**

**OS.No.13/2024**

dated : 22.01.2025

P.W.1

Name: Rajaram

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

வழக்குரை என் தகவலின் பேரில் தான் தயாரிக்கப்பட்டது. முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எங்கள் ஆர்எஸ் கோல்டு பீடி என்ற நிறுவனத்தின் பெயரை பிரதிவாதிகள் தவறாக பயன்படுத்தி வருகிறார்கள். எங்கள் நிறுவனத்தின் தயாரிப்புகள் தரமானவையாகும். பிரதிவாதிகளின் தயாரிப்பு எங்கள் நிறுவனத்தின் பெயரில் தரமற்ற முறையில் தயாரித்து விற்பனை செய்யப்படுகிறது. 2017 ஆம் ஆண்டு முதல் பீடி தொழில் செய்து வருவதாக வழக்குரையில் கூறியுள்ளேன். இந்தியன் டிரேடு ஆக்ட் -ன் படி எங்கள் நிறுவனத்தின் ஆர்எஸ் கோல்டு பீடி என்ற வணிக குறியீடு பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் பதிவு செய்யப்பட்டுள்ளது. வணிக குறியீடு பதிவு சட்டத்தின் கீழ் ஆர்எஸ்கோல்டு பீடி என்ற வணிக குறியீடு பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 UDYAM என்ற சிறு குறு தொழில் நிறுவன பதிவு சான்று அல்ல என்றால் சரியல்ல. எனக்கு எழுத படிக்கத் தெரியும். UDYAM TN- 18-0008541

என்ற எண் வா.சா.ஆ.1ல் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சோப்பு வியாபாரம் நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஒரே நாளில் பதிவு செய்து சான்று பெறமுடியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணமானது சோப்பு நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட சான்று என்றால் சரியல்ல. சோப்பு நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட சான்றை திருத்தங்கள் செய்து இந்நீதிமன்றத்தில் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 பீடி நிறுவனத்திற்கானது அல்ல என்றும் அதை வழக்கிற்காக உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ல் குறிப்பிடப்பட்டுள்ள ஜிஎஸ்டி எண் வாதி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது தான். வா.சா.ஆ.2 ஆவணம் 2020 - 2021ம் ஆண்டிற்குரியது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ல் குறிப்பிட்டுள்ள ஜிஎஸ்டிஎண் 2000 ம் ஆண்டிலேயே ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ல் குறிப்பிட்டுள்ள ஜிஎஸ்டி எண் வாதி நிறுவனத்திற்குரியது தான். அதில் குறிப்பிட்டுள்ள ஜிஎஸ்டி எண்ணிற்குரிய கணக்கிற்கு நாளது தேதி வரை கணக்கு தாக்கல் செய்து வருகிறேன். வா.சா.ஆ.3 ஆவணம் 20.07.2018 ஆம் ஆண்டிலேயே மேற்படி எண்ணுக்குரிய பதிவு ரத்து செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தற்போதைய ஜிஎஸ்டி பதிவு நடைமுறைகள் எனக்குத் தெரியும். வெளிநபர்களிடம் இருந்து பீடி வாங்கி விற்று வருகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் பீடியை வெளிநபர்களிடம் இருந்து வாங்கியும், சொந்தமாக உற்பத்தி செய்தும் விற்று வருகிறார்கள் என்றால் சரியல்ல வெளிநபர்களிடம் விலைக்கு வாங்கி விற்று

வருகிறார்கள். எனது வழக்கறிஞர் அறிவிப்பில் 2020 முதல் தொழில் செய்து வருவதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வணிக குறியீடு சட்டம் பிரிவு 34 ன் படி ஆர்எஸ்கோல்டு பீடி என்ற பெயரை பதிவு செய்துள்ளதாக அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் அறிவிப்பு அனுப்பிய காலம் முதல் தான் பிரதிவாதிக்கும் எங்களுக்கும் பிரச்சனை இருந்து வருகிறது. வா.சா.ஆ.4 ன் படி 1ம் பிரதிவாதிக்கு நான் பீடி விற்பனை செய்துள்ளேன் என்றால் சரிதான். அது 2020 ஆம் ஆண்டிற்குரியது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ல் உள்ள ஜிஎஸ்டி எண் 2017 ஆம் ஆண்டிற்குரியது என்றால் சரிதான். அது பழைய ஜிஎஸ்டி எண் என்றால் சரிதான். நடைமுறையில் இல்லாத ஜிஎஸ்டி எண்ணை குறிப்பிட்டு வா.சா.ஆ.5-ஐ உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 வணிக குறியீடு சட்டத்தின் கீழ் பதிவு செய்ய நான் தாக்கல் செய்த பதிவு விண்ணப்பத்தின் நகல் ஆகும். 18.12.2019 அன்று தான் அவ்வாறு விண்ணப்பித்ததாக காணப்படுகிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 க்கு முன்பு அது போன்ற விண்ணப்பம் எதையும் நான் அனுப்பவில்லை. வா.சா.ஆ.6 ன் படி வணிக குறியீடு அனுமதித்து உத்தரவு ஏதும் வழங்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.6 ன் படி எனக்கு வணிக குறியீடு வழங்கப்படவில்லை என்றும் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.8 ஆவணம் பாலித்தீன் உறைகள் வாங்கப்பட்டதற்கான பில்கள் என்றால் சரிதான். மிகச்சிறிய அளவிலான உறைகள் எங்கள் வியாபாரத்திற்கு அவசியமற்றவை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 வணிக

குறியீடு சட்டத்தின் கீழ் பிரதிவாதி கொடுத்த விண்ணபத்திற்கு ஆட்சேபனை செய்து நான் தாக்கல் செய்த எதிர் உரை ஆகும். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். எதிர்உரையானது 21.10.2020 அன்று தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த எதிருரையில் வாதி நிறுவனம் வணிக குறியீடு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 மற்றும் 11 சாதாரணமாக பார்க்கும் போது வேறுபாடுடன் உள்ளது என்றால் சரியல்ல பார்வைக்கு ஒன்றாகவே காணப்படுகிறது. வாதி நிறுவனத்தின் கிளை சங்கரன்கோவிலில் உள்ளது என்றால் சரியல்ல வென்றிலிங்கபுரத்தில் உள்ளது. வா.சா.ஆ.10 ஆவணத்தில் வென்றிலிங்கபுரம், சங்கரன்கோவில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சங்கரன்கோவில் கிளையினை மையமாக வைத்து ஜிஎஸ்டி சான்றோ, UDYAM நிறுவன பதிவு சான்றோ இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.14 ல் 2016 ஆம் ஆண்டு முதல் தொழில் செய்து வருவதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒவ்வொரு ஆவணங்களிலும் வெவ்வேறு விதமாக 2016 ஆம் ஆண்டு, 2017 ஆம் ஆண்டு, 2018 ஆம் ஆண்டு முதல் தொழில் செய்து வருவதாக கூறப்பட்டுள்ள நிலையில் நான் எந்த ஆண்டு முதல் தொழில் செய்து வருகிறேன் என்றால் 2017 முதல் தொழில் செய்து வருகிறேன். வா.சா.ஆ.17,18 ல் புகார்தாரர்கள் எனது உறவினர்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.19 ற்கான முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சியாக நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படாது என உயர்நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.17,18 மீதான நடவடிக்கை

நிறுத்தி வைக்கவும், நசித்திடவும் பிரதிவாதிகள் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.19 எங்கள் நிறுவன மேலாளர் கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை என்றால் சரிதான். அந்த புகாரில் வணிக குறியீடு சட்டத்தின் கீழ் எங்கள் நிறுவனம் பதிவு செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உயர்நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் வணிக குறியீடு சட்டத்தின் கீழ் வாதி நிறுவனம் பதிவு செய்யப்படவில்லை என்றும் எனவே வா.சா.ஆ.19 ன் தொடர் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க உத்தரவிடுவதாக உயர்நீதிமன்ற உத்தரவில் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு முதலில் திருநெல்வேலி முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.183/2021 ஆக பதிவு செய்யப்பட்ட பின்னர் நீதிமன்றம் பிரதிவாதிகளுக்கு எதிராக தடை உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும் எனவே பிரதிவாதி நிறுவன தயாரிப்புகளை யாரும் வாங்கக்கூடாது என துண்டு பிரசரம் வெளியிட்டேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் பீடி வாங்கி விற்கும் தொழிலை தேனி மாவட்டம் கம்பம் பகுதியில் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகளின் செயலால் வாதி நிறுவனத்தின் தொழிலுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக வழக்குரையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எந்த முறையில் பாதிப்பு என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். அதற்குரிய ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வணிக குறியீடு சட்டத்தின் கீழ் வாதி நிறுவனம் பதிவு செய்யப்படாத நிலையில் இந்த வழக்கை

தாக்கல் செய்ய எனக்கு தகுநிலை ஏதும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியும் என் மீது புகார் கொடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி என் மீது போலியான பீடி தயாரிப்பதாக அதில் குறிப்பிட்டிருந்தார் என்றால் சரிதான். அதன் மீது நான் உயர்நீதிமன்றத்தில் மனு ஏதும் தாக்கல் செய்யவில்லை.

வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.01.22 16:50:35 +0530